இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 21-12-2024

# அம்பேத்கரின் சொர்க்கம்

அண்ணல் அம்பேத்கரின் ‘சொர்க்கத்தில்’ அமித்ஷாக்களுக்கு இடமில்லை. பா.ஜ.க. இருக்காது. அதனால்தான் அமித்ஷா அலறுகிறார்!

“அம்பேத்கர், அம்பேத்கர் என்று சொல்வது இன்றெல்லாம் பேஷன் ஆகிவிட்டது. இதற்குப் பதிலாக கடவுளின் பேரை இவ்வளவு முறை சொல்லி இருந்தால் சொர்க்கத்தில் அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும்” என்கிறார் இந்திய நாட்டின் உள்துறை அமைச்சர் அமித்ஷா. தனக்கு அமைச்சர் பதவி கொடுத்த நாட்டை விட, சொர்க்கத்தைப் பற்றித்தான் கவலையாக இருக்கிறது.

**“ஜனநாயகம் என்பது அரசாங்கத்தின் ஒரு வடிவம் அன்று, மாறாகச் சமூக அமைப்பின் ஒரு வடிவம்” என்றார் அண்ணல். அரசியல் - சமூக - பொருளாதார - சிந்தனைச் சுதந்திரம் வரை அனைத்தையும் பறித்து - நாடாளுமன்ற ஜனநாயகத்தை முடக்கி - உயர் பண்பாட்டு விழுமியங்களை உருவாக்கிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே சிதைக்க நினைப்பவர்களுக்கு அம்பேத்கர் என்றால் எரிச்சலாகத்தான் இருக்கும்.**

ஓர் அரசு எப்படி ஆட்சி புரிய வேண்டும் என்ற கற்பனை அண்ணல் அம்பேத்கருக்கு இருந்தது. ஒவ்வொரு மக்களின் வாழ்க்கை, அவர்களின் சுதந்திரம், மகிழ்ச்சி ஆகியவற்றை உறுதிப்படுத்துவதாக அரசு இருக்க வேண்டும். அந்த மக்களுக்கு பேச்சுச் சுதந்திரம் இருக்க வேண்டும். தங்களுக்கான மத அறநெறியைத் தேர்வு செய்வதற்கான சுதந்திரம் இருக்க வேண்டும். அடித்தட்டில் அமுக்கி வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அதிக வாய்ப்புகளை அளிப்பதன் மூலமாக அரசியல் மற்றும் பொருளாதார சமத்துவமின்மையை நீக்குவதாக அந்த அரசு இருக்க வேண்டும். ஒவ்வொரு மக்களும் தங்கள் தேவையை அடைய வேண்டும். அச்சமற்று வாழவேண்டும். ஓர் இனம், மற்றோர் இனத்தின் மீது தாக்குதல் தொடுத்தால் அதை தடுத்து நிறுத்தி பாதிக்கப்பட்டவர் பக்கம் நிற்பதே அரசு. - இவ்வாறு வரையறுத்தார் அம்பேத்கர் அவர்கள்.

**அமித்ஷாக்களுக்கு புரியும் ‘பாஷையில்’ சொல்வதாக இருந்தால் இதுதான் ‘சொர்க்கம்’. இந்த சொர்க்கத்தில் அமித்ஷாக்கள் இருக்க முடியுமா?**

“இந்தியாவில் பெரும்பான்மை என்றால் அது வகுப்புவாதப் பெரும்பான்மையாகும். அவர்களுடைய சமூக மற்றும் அரசியல் திட்டம் எதுவாக இருந்தாலும் சரி, பெரும்பான்மையினர் தங்கள் வகுப்புவாத பெரும்பான்மையின் குணத்தை அப்படியே நீடித்து நிலைபெறச் செய்வதில் உறுதியாக இருக்கிறார்கள்” என்றார் அண்ணல். இதைத்தான் இப்போது அமித்ஷாக்கள் உருவாக்கிக் காட்டி வருகிறார்கள்.

“இங்குள்ள மதம் சுதந்திரமான அறநெறி வாழ்க்கையைப் பறிக்கிறது. பகுத்தறிவுச் சிந்தனைகளுக்கு இதில் இடமில்லை. சட்டங்களுக்கும், அனைத்துச் சமூகத்தினருக்கும் சமத்துவமற்ற முறையில் இருக்கிறது.” என்றார் அம்பேத்கர். அதன் முகமாகத்தான் அமித்ஷா இருக்கிறார். அமித்ஷாவின் பேச்சுகளும், அவர் காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டங்களும் இந்திய அரசியல் வரலாற்றில் கரும்புள்ளிகள் அல்லவா?

‘மதச்சார்பற்ற’ என்ற சொல்லை அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்க இன்று பா.ஜ.க.வினர் நினைக்கிறார்கள். ‘மதச்சார்பற்ற’ என்பதற்கு அம்பேத்கர் இலக்கணம் சொல்லி இருக்கிறார்.

**“மதச்சார்பற்ற அரசு என்பது, இந்த நாடாளுமன்றம் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் பிற மத மக்கள் மீதும் திணிப்பதற்கு அதிகாரம் பெற்றதில்லை என்று பொருளாகும். அந்த வரையறையை மட்டுமே அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரிக்கிறது”** என்று இந்து சட்டத் தொகுப்பு சட்டமுன்வடிவின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்டார். **“அரசு தனது மக்களுக்கு அவர்கள், தங்கள் மனச்சாட்சிப்படி நடந்து கொள்ளவும், தங்கள் மதக் கருத்துக்களை ஒளிவுமறைவின்றி தெரிவிப்பதற்கான, போதனை செய்வதற்கான மற்றும் பொது ஒழுங்கு, அறநெறிக்கு உட்பட்டு மாறுவதற்கான உரிமைகளை உத்தரவாதம் செய்திட வேண்டும்”** என்றார் அவர்.

‘சோசலிசம்’ என்ற சொல்லைப் பார்த்தால் பா.ஜ.க.வினருக்கு பயமாக இருக்கிறது. ‘சோசலிசம்’ என்ற சொல்லை இந்திய அரசியலமைப்பின் முகப்புரையில் சேர்க்கவேண்டும் என்று கே.டி.ஷா சொன்னபோது, அரசியலமைப்புச் சட்டத்தின் குணத்தில் சோசலிசம் பல்வேறு இடங்களில் இருக்கிறது என்று சொன்னவர் அம்பேத்கர். **“வழிகாட்டும் கோட்பாடுகள் அதன் வழிகாட்டுதல்களில், அதன் சாராம்சத்தில் சோசலிசத்தைக் கொண்டிருக்கவில்லை என்றால் வேறு எது சோசலிசமாக இருக்க முடியும் என்று புரிந்து கொள்வதில் நான் தோல்வியடைந்து விடுகிறேன். இத்தகைய சோசலிசத் தத்துவங்கள் ஏற்கனவே நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தில் மிகவும் தெளிவாக உள்ளடக்கப்பட்டிருக்கின்றன”** என்று விளக்கமளித்தார்.

மதச்சார்பற்ற, சோசலிச என்ற சொற்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் பல்வேறு கூறுகளில் இடம்பெற்றுள்ளன என்று நினைத்தார் அண்ணல். அதனைத்தான் சிதைக்க நினைக்கிறார்கள்.

பா.ஜ.க. நினைத்ததைப்போல 400 இடங்களில் வென்றிருந்தால் இன்று இந்திய நாட்டின் நிலைமை என்னவாக ஆகி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின் 75 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டிருக்காது. ‘ஒரே நாடு - ஒரே தேர்தல்’ சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கும்.

**அமித்ஷா கோபம் ஆவது ராகுல் காந்தியை, ‘இந்தியா’ கூட்டணியைப் பார்த்து மட்டுமல்ல, அம்பேத்கரைப் பார்த்துத்தான் கோபமாகிறார். ‘அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான தாக்குதல் என்பது அம்பேத்கரின் மீதான தாக்குதலாக’ அடையாளப் படுத்தப்படுவதைத்தான் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அரசியலமைப்புச் சட்டத்தைத் தொட்டால் ‘ஷாக்’ அடிப்பது அதில் ‘அம்பேத்கர்’ வோல்டேஜ் இருப்பதால்தான்.**

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதைப் போல, ‘அண்ணல் அம்பேத்கர் பெயரை சொல்லிக் கொண்டே இருப்போம்’!**



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2024) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் ரூ.51.32 கோடி செலவில் முடிவுற்ற 38 திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.250.48 கோடி மதிப்பீட்டில் 19 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.சுப்பராயன், கே.இ.பிரகாஷ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற வளாகத்தில் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**‘இந்தியா’ கூட்டணி எம்.பிக்களுடன், பா.ஜ.க. எம்.பி.க்கள் வாக்குவாதம்!**

நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்திய ‘இந்தியா’ கூட்டணி மற்றும் பா.ஜ.க. கூட்டணி எம்.பி.கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதால் பரபரப்பு நிலவியது. இந்தியா கூட்டணி எம்.பிக்கள் போராட்டம் நடத்தியதற்குப் போட்டியாக பா.ஜ.க. கூட்டணியும் போராட்டம் நடத்தியது. நாடாளுமன்ற வளாகத்தில் எதிரெதிரே நடைபெற்ற இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து இருதரப்புக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு மோதல் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டது.

**மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி கூறுகையில்,**

“கேமராவில் நீங்களே பார்த்து இருப்பீர்கள். என்ன நடந்தது என்று பார்த்தால் உங்களுக்கே தெரியும். எங்களை நாடாளுமன்றத்தில் நுழைய விடாமல் பா.ஜ.க. எம்.பி.க்கள் தடுத்து நிறுத்தினார்கள். உள்ளே வரக்கூடாது என்று அவர்கள் (பா.ஜ.க. எம்.பி.க்கள்) மிரட்டினர். நாடாளுமன்றத்துக்குள் செல்வதற்கு எங்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலகவேண்டும் என்பதே தங்களின் முக்கிய கோரிக்கை அண்ணல் அம்பேத்கரை பா.ஜ.க. அவமதித்துவிட்டது” என்றார்.

**நாடாளுமன்ற இருஅவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைப்பு!**

அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் இரண்டாவது நாளாக தொடர்ந்து முழக்கமிட்டதால் நாடாளுமன்ற அலுவல்கள் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கரை அவமதிக்கும் வகையில் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வலியுறுத்தி இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் 2வது நாளாக நேற்று தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்தனர். அதன்படி, மக்களவை கூடியதும், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை பிரதமர் மோடி பதவியிலிருந்து நீக்கவேண்டும் என, இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். மேலும், இதுகுறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. இதனைக் கண்டித்து இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் முழக்கம் எழுப்பினர். இதையடுத்து, இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

**பிரதமருக்கு காங்கிரஸ் வலியுறுத்தல்!**

“பிரதமர் மோடி அம்பேத்கரை மதிப்பவர் என்றால் அமித்ஷாவை உடனே பதவிநீக்கம் செய்ய வேண்டும்” என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே எழுதியுள்ள கடிதத்தில், “ஒவ்வொரு இந்தியரின் மனதிலும் அம்பேத்கர் குடிகொண்டுள்ளார்” என்று தெரிவித்துள்ளார். “அமித்ஷாவின் அவமதிப்புப் பேச்சால், அம்பேத்கரை விரும்பும் இந்தியர்களின் மனம் புண்பட்டுள்ளது” என்று கார்கே தெரிவித்துள்ளார். “அம்பேத்கரை மதிக்கிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது, அவரை உண்மையாக மதிப்பவர் என்றால் அமித்ஷாவை பிரதமர் மோடி உடனே பதவிநீக்கம் செய்ய வேண்டும்” என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார். “ஆர்.எஸ்.எஸ்., மற்றும் பா.ஜ.க.,வின் எண்ணத்தையே அமித்ஷா பிரதிபலித்துள்ளார்” என்றும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# துறைமுகம் சட்டமன்றத் தொகுதி சார்பில் - கிறிஸ்துமஸ் பெருவிழா - 2024

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, டிச.21-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க துறைமுகம் சட்டமன்ற தொகுதி சார்பில், கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு 21.12.2024 சனிக்கிழமை, மாலை 4.00 மணி அளவில் சென்னை, பிராட்வே, டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெறும் அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழாவில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை ஏற்று 2,500 கிறிஸ்துவ மக்களுக்கு புத்தாடை மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றார்.

இச்சிறப்புமிக்க கிறிஸ்துமஸ் விழாவில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி, சென்னை மாநகராட்சி மேயர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருமதி. பிரியாராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பிராட்வே தொன்போஸ்கோ பள்ளி ரெக்டார் (ம) தாளார் அருட்தந்தை கிரகோரி தேவராஜன் வரவேற்கின்றனர். முன்னாள் சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், இ.சி.ஐ. பிரதம பேராயர், இந்திய கவிசேஷ திருச்சபை உயர் மாமறை டாக்டர்.ஏ.ஜெ.டேவிட் ஒநேசிமு , ஆற்காடு லூத்தரன் திருச்சபை பேராயர் உயர்மாமறை டாக்டர் டி. பீட்டர் பால் தாமஸ் , கௌரவ செயலாளர், சி.எஸ்.ஐ.சென்னை பேராய மன்றம் அருள்பணி செ.அகஸ்டின் பிரேம்ராஜ் , சகாய மாதா ஆலயம், பிராட்வே அருட்தந்தை சிற்றரசு சிறப்புரை யாற்றுகிறார்கள்.

மேலும் சகாய மாதா திருத்தலம், பிராட்வே பாடல் குழுவினர் பாடல் இசைக்கின்றனர்.

மற்றும் தலைமை ஆசிரியர் இ.எல்.எம்.பெப்ரிசியஸ் மேல்நிலைப்பள்ளி கவிஞர் ஜோ.அருள் பிரகாஷ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகின்றார்.

இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நன்றியுரை ஆற்றுகிறார்.

மேலும், இவ்விழாவில் எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, இரா. நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு எம்.சி, இசட் ஆசாத் எம்.சி, என்.பி.எம். சேக் அப்துல்லா, பா.ஜெகதீஷ், எம்.இப்ராஹிம்கனி, இரா.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எம். வினாயகம், பா.பிரதீப்குமார், எல். சம்பத்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், மே.ஜனார்தனன், கே. ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார், த.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், டி.சதீஷ்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, மாமன்ற உறுப்பினர்கள்: தாஹா எல்.நவீன், வெ.பரிமளம், ராஜேஷ் ஜெயின் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

